தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரின் செயல் முறைகள், சென்னை–06.

ந.க.எண்.031617/எம்/இ1/2021, நாள். 11 .10.2021.

பொருள்: பள்ளிக்கல்வி - 2023–இல் வெண்புள்ளிகள் விழிப்புணர்வு பெற்ற மாநிலமாக தமிழகத்தை மாற்றுவதற்கான மாணவர்கள் - மக்கள் சந்திப்பு இயக்கத்தில் பள்ளி ஆசிரியர்கள், மாணவர்களை சந்திக்க அனுமதி கோருதல் – தொடர்பாக.

பார்வை: 1. செயலாளர், வெண்புள்ளிகள் விழிப்புணர்வு இயக்கம் - இந்தியா சென்னை அவர்களிடமிருந்து பெறப்பட்ட மனு நாள் 02.09.2021.

*****

பார்வையில்காணும்வெண்புள்ளிகள் விழிப்புணர்வு இயக்கம் - இந்தியா இயக்கம் சார்பாக 1996 ஆம் ஆண்டு முதல் வெண்புள்ளிகள் நோயல்ல, பிறருக்கு தொற்றாது, பரம்பரையாக வராது என்ற அறிவியல் உண்மையை, கருத்தரங்குகள், மனிதசங்கிலிகள், பேரணிகள், மாராத்தான்கள் என பல்வேறு வடிவங்களில் வெண்புள்ளிகள் உள்ளவர்களிடமும் பொதுமக்களிடமும் பரப்பி வருவதாகவும், அதன் தொடர்ச்சியாக 2023–இல் வெண்புள்ளிகள் விழிப்புணர்வு பெற்ற உலகின் முதல் மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிட திட்டமிட்டு செயல்பட்டு வருவாதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் ஒரு பகுதியாக தமிழகத்திலுள்ள அனைத்துவகைப் பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களிடையே வெண்புள்ளிகள் குறித்த விழிப்புணர்வு கருத்துகளை பகிர்ந்து கொண்டு கலந்துரையாட திட்டமிட்டுள்ளதாகவும், அதற்கான உரிய அனுமதியினை வழங்கிடுமாறும் கோரப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி விழிபுணர்வு சார்பான நிகழ்ச்சியை அனைத்து வகைப் பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஏற்படுத்திட தகுந்த

ஒத்துழைப்பு வழங்கிடுமாறு அனைத்துவகைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் உரிய அறிவுரை வழங்கிட அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டக் கல்விஅலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு: – பார்வையில் காணும் கடித நகல்

ஆணையர்

பெறுநர்
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்கள்
நகல்

1. செயலாளர்,
   வெண்புள்ளிகள் விழிப்புணர்வு இயக்கம் – இந்தியா,
   எண் 4/8, தெய்வ நகர் முதல் தெரு,
   பட்டேல் நகர், மேற்குதாம்பரம்,
   சென்னை–45.
2. அரசு முதன்மைச் செயலாளர்,
   பள்ளிக் கல்வித்துறை,
   தலைமைச் செயலகம்,
   சென்னை–09 (தகவலுக்காக அனுப்பி வைக்கப்படுகிறது).

2023 -ல் வெண்புள்ளிகள் விழிப்புணர்வு பெற்ற முதல் மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்க மக்கள் சந்திப்பு இயக்கம்



# வெண்புள்ளிகள் விழிப்புணர்வு இயக்கம் - இந்தியா
# LEUCODERMA AWARENESS MOVEMENT - INDIA

(Run by : Awareness Charitable Trust (Regd No:98/2015))

எண். 4/8, தெய்வ நகர் முதல் தெரு, பட்டேல் நகர், மேற்கு தாம்பரம், சென்னை – 600 045.

☎ 044 - 2226 5507 | 98400 52464 | leucodermafree@yahoo.in | www.vitiligoindia.org

In Association with

TNSF

## தமிழ்நாடு அறிவியல் இயக்கம் TAMILNADU SCIENCE FORUM


JD (NSS) What do we do when we receive such requests? 2/9/21

பெறுநர்

02.09.2021

**உயர்திரு. ஆணையாளர் அவர்கள்,**
பள்ளிக்கல்வித்துறை,
தமிழ்நாடு அரசு, சென்னை.

மதிப்பிற்குரிய அய்யா வணக்கம் .

பொருள் : 2023 ல் வெண்புள்ளிகள் விழிப்புணர்வு பெற்ற மாநிலமாக தமிழகத்தை மாற்றுவதற்கான மாணவர் - மக்கள் சந்திப்பு இயக்கத்தில், பள்ளி ஆசிரியர்கள், மாணவர்களை சந்திக்க அனுமதி கோருதல் சார்பு.

வெண்புள்ளிகள் விழிப்புணர்வு இயக்கம் - இந்தியா. 1996 ஆம் ஆண்டு முதல் ' வெண்புள்ளிகள் நோயல்ல, 'பிறருக்கு தொற்றாது' பரம்பரையாக வராது' என்ற அறிவியல் உண்மையை, கருத்தரங்குகள், மனிதசங்கிலிகள், பேரணிகள், மாராத்தான்கள் என பல்வேறு வடிவங்களில் வெண்புள்ளிகள் உள்ளவர்களிடமும் பொதுமக்களிடமும் பரப்பி வருகிறோம்.

2023 இல் வெண்புள்ளிகள் விழிப்புணர்வு பெற்ற உலகின் முதல் மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்க திட்டமிட்டு செயல்பட்டு வருகிறோம்.

ஜூன் 25, உலக வெண்புள்ளிகள் தினத்தன்று மாண்புமிகு. தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திருமிகு. மா.சுப்பிரமணியன் அவர்கள் விழிப்புணர்வு குறும்படத்தை தலைமை செயலகத்தில் தொடங்கி வைத்தார்கள்.

லூக்கோடெர்மா , விட்டிலைகோ என்று பிற மொழிகளில் அழைக்கப்படும் வெண்புள்ளிகளை 'வெண்குஷ்டம்' என்று அழைக்கும் வழக்கம் ஆண்டாண்டு காலமாக நிலவி வந்தது. வெண்புள்ளிகள் விழிப்புணர்வு இயக்கம்- இந்தியாவின் தொடர் முயற்சியின் காரணமாக 2010 ல் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் டாக்டர்.கலைஞர் அவர்கள் ' வெண்குஷ்டம்' என்று அழைப்பதை தடைசெய்தும் வெண்புள்ளிகள் என்றுதான் அழைக்க வேண்டும் என்றும் அரசாணை வெளியிட்டு உத்தரவு பிறப்பித்தார்கள்.



**வெண்புள்ளிகள் விழிப்புணர்வு இயக்கம் - இந்தியா**

**LEUCODERMA AWARENESS MOVEMENT - INDIA**

(Run by : Awareness Charitable Trust (Regd No:98/2015))

எண். 4/8, தெய்வ நகர் முதல் தெரு, பட்டேல் நகர், மேற்கு தாம்பரம், சென்னை – 600 045.

044 - 2226 5507 98400 52464 leucodermafree@yahoo.in www.vitiligoindia.org

In Association with

**தமிழ்நாடு அறிவியல் இயக்கம் TAMILNADU SCIENCE FORUM**

அதன் பின்னரும் தென் தமிழ்நாட்டில் உள்ள ஒரு தனியார் பல்கலைக்கழகம் வெண்புள்ளிகளை காரணம் காட்டி திருநெல்வேலியை சேர்ந்த ஐயப்பன் என்ற காது கேட்காத, வாய்பேச வராத மாணவனை கல்லூரியை விட்டு வெளியே அனுப்பியது. இதுபோன்று பல்வேறு பள்ளிகளில் ஆங்காங்கே நடைபெற்ற நிகழ்வுகளை அரசின் கவனத்திற்கு கொண்டு சென்றோம். இதன் பலனாக பள்ளி, கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கையின் போதோ, அல்லது பயிலும் போதோ வெண்புள்ளிகள் உள்ள மாணவ, மாணவிகளை பாரபட்சமாக நடத்தக்கூடாது. அப்படி பாரபட்சமாக செயல்படும் பள்ளி - கல்லூரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழ்நாடு அரசு உத்தரவிட்டது.

தமிழ்நாட்டு பாடத்திட்டத்தில் பதினோராம் வகுப்பு உயிரியல் புத்தகத்தில் வெண்புள்ளிகள் நோயல்ல என்பதற்கான சிறு குறிப்பு இடம் பெற்றுள்ளது.

இது மட்டுமல்ல, வெண்புள்ளிகள் உள்ளவர்கள் எவ்வளவு படித்திருந்தாலும் எவ்வளவு சம்பாதித்தாலும் எத்தனை உயர்பதவியில் இருந்தாலும் அவர்களை திருமணம் செய்து கொள்ள அவர்களது சொந்த உறவுகள் கூட தயங்குகிறார்கள் அல்லது நிராகரிக்கிறார்கள். இதை போக்கி வெண்புள்ளிகள் உள்ளவர்களும் மற்றவர்களை போல இயல்பான வாழ்க்கையை மேற்கொள்ள வெண்புள்ளிகள் உள்ளவர்களுக்கான சுயம்வரங்களை தொடர்ந்து நடத்தி வருகிறோம்.

ஏறக்குறைய 400 திருமணங்கள் இதன் வாயிலாக செய்துக்கொண்டு மகிழ்ச்சியோடு வாழ்ந்து வருகிறார்கள்.

இத்தகைய முயற்சிகளுக்கு பின்னர் ஓரளவு விழிப்புணர்வு ஏற்பட்டிருப்பது உண்மை.
இருந்தபோதிலும் அது போதுமானதாக இல்லை.

எனவே மாநிலத்தின் பட்டி தொட்டி எங்கும் வெண்புள்ளிகள் விழிப்புணர்வை கொண்டு சென்று ' வெண்புள்ளிகள் நோயல்ல' ; பிறருக்கு தொற்றாது, பரம்பரையாக வராது என்று "விழிப்புணர்வு பெற்ற உலகின் முதல் மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்க திட்டமிட்டுள்ளோம்." இது சுமார் 37

# வெண்புள்ளிகள் விழிப்புணர்வு இயக்கம் - இந்தியா

# LEUCODERMA AWARENESS MOVEMENT - INDIA

(Run by : Awareness Charitable Trust (Regd No:98/2015))

எண். 4/8, தெய்வ நகர் முதல் தெரு, பட்டேல் நகர், மேற்கு தாம்பரம், சென்னை – 600 045.

044 - 2226 5507 98400 52464 leucodermafree@yahoo.in www.vitiligoindia.org

In Association with

## தமிழ்நாடு அறிவியல் இயக்கம் TAMILNADU SCIENCE FORUM


லட்சம் வெண்புள்ளிகள் உள்ள குடும்பத்தில் நிம்மதியையும், மகிழ்ச்சியையும் கொண்டு சேர்க்கும்.

இதற்காக வெண்புள்ளிகள் விழிப்புணர்வு இயக்கம் - இந்தியாவும் - தமிழ்நாடு அறிவியல் இயக்கமும் இணைந்து மாணவர் - மக்கள் சந்திப்பு இயக்கம் நடத்த திட்டமிட்டுள்ளோம்.

குறும்படங்கள், கார்ட்டூன்கள், துண்டறிக்கைகள், விழிப்புணர்வு போஸ்டர்கள், கலந்துரையாடல்கள், கண்காட்சிகள்... என பல்வேறு வகைகளில் நடத்த உள்ளோம்.

மக்கள் சந்திப்பு பயணத்தில் பொதுமக்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், சுகாதாரப் பணியாளர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், தனியார் நிறுவன பணியாளர்கள் என அனைத்து தரப்பு மக்களிடையே வெண்புள்ளிகள் விழிப்புணர்வு ஏற்படுத்த திட்டமிட்டுள்ளோம்.

அதன் ஒரு பகுதியாக தமிழகத்தில் உள்ள அனைத்து வகை பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வித்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் இடையே வெண்புள்ளிகள் குறித்த விழிப்புணர்வு கருத்துக்களை பகிர்ந்து கொண்டு கலந்துரையாட திட்டமிட்டுள்ளோம். இதற்காக உரிய அனுமதியினை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் பள்ளிக் கல்வி இயக்குநர்கள், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்களுக்கு தகவல் தந்து உதவுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

தங்களன்புள்ள

கே. உமாபதி
செயலாளர்
வெண்புள்ளிகள் விழிப்புணர்வு இயக்கம்- இந்தியா
9600158690